
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 17 AUGUST 2025 ஆகாரம் : 08



# UPCOMING EVENTS

**All Sun Aug '25** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Tue Aug '25** — Tuesday
7:30 pm
**COTTAGE PRAYER**
Church Members House

**02 Aug '25** — Saturday
5:00 pm & 6.30 pm
**MONTHLY FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Wed Aug '25** — Wednesday
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**09 23 Aug '25** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**02 16 Aug '25** — Saturday
7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**23 Aug '25** — Saturday
9:30 pm
**BIBLE QUIZ-JOB**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**30 Aug '25** — Saturday
7:30 pm
**PRAISE & WORSHIP SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**31 Aug '25** — Sunday
10:00 am
**MINISTRY LEADERS RETREAT**
Majlis hall-Kanad hospital

**31 Aug '25** — Sunday
11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

# From the Pastor's Desk



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

ஜூலியஸ் சீசர் என்பவர் கி.மு 44 உரோமைப் பேரரசை ஆட்சி புரிந்தவர். அவருக்குப் பின்னர் அவரது தங்கையின் மகன் அகஸ்டஸ் சீசர் உரோமைப் பேரரசை சிறந்த முறையில் ஆட்சி செய்தவர். இவர்களது பெயரிலே ஜூலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்கள் பெயரிடப்பட்டன. தொடர்ந்து போப் 13 ஆம் கிரகோரியின் காலத்தில் நாம் பயன்படுத்தும் ஆங்கிலக் காலண்டர் 12 மாதங்கள் உள்ளடக்கிய 'கிரகோரியன்' காலண்டராக வெளிவந்தது.

இந்த ஆகஸ்ட் மாதத்திற்கு உலகளாவிய சிறப்பு தினங்கள் பல உள்ளன. அவற்றுள் நமது இந்திய நாட்டின் விடுதலைத் திருநாளான ஆகஸ்ட் 15,1947 இதனை சற்று நினைவுகூர்வோம்.

"அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்று மகாகவி பாரதியும், "சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை நான் அடைந்தே தீருவேன்" என்று பாலகங்காதர திலகரும், மூவர்ண கொடியினை கையில் ஏந்தி உயிர் நீத்த திருப்பூர் குமரனும், "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்று அகிம்சை முறையில் விடுதலை போராட்டத்திற்காக தலைமை ஏற்று நடத்தின மகாத்மா காந்தி அவர்களும், இன்னும் இப்படி பலர் தங்களை அர்ப்பணித்து போராடி பெற்றுத் தந்ததே நமது இந்திய நாட்டின் விடுதலை. இவர்களை எல்லாம் நினைக்கிறோம், மதிக்கிறோம்.

பிரியமானவர்களே, உலகிற்கே விடுதலை வாழ்வை தருவதற்கு தம் உயிரையே சிலுவையிலே ஈந்த ஆண்டவர் இயேசு நம் ஒவ்வொருவரையும் அவரிடம் அழைக்கிறார், நிறைவான விடுதலை வாழ்வை பெற்று வாழ்ந்திடவே அழைக்கிறார்.

**ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்:**

செப்பனியா தீர்க்கர் (செப் 3:15) வழியே அன்றைய இஸ்ரவேல் மக்களுக்கு கர்த்தர் உரைத்தது, பயப்படாதே கர்த்தர் உங்கள் நடுவிலே இருக்கிறார், இனி தீங்கை காணாதிருப்பாய் என்று வாக்களித்தார். அப்படியே இஸ்ரவேலரை வாழ வைத்தார். ஆண்டவர் கர்த்தர் நம்மை அழைப்பதும்,அவர் நம்மிடையே வாழ்வதற்கு இடம் அளிக்கும் போது நம்முடன் இணைந்து வாழ்ந்து நிறைவைப் பெறுவதற்கும், தீங்கை காணாமல் நன்மையே கண்டு நிறைவாய் வாழ்ந்திடவுமே. எனவே,ஆண்டவர் இயேசுவுக்கு நமது உள்ளத்திலும் நாம் வாழும் இல்லத்திலும் இடம் அளிப்போமா?

### ஆண்டவர் இரட்சிப்பவர்:

ஆண்டவராகிய கர்த்தருக்கு இடமளிக்கும்போது, பயமில்லாத வாழ்வும் நன்மையான வாழ்வும் அமைவதோடு, அவர் நமக்கு ஏற்படுகிற நெருக்கங்கள் எல்லாவற்றிலும் இருந்து விடுதலை தருபவருமான சர்வ வல்லமை பொருந்தினவர். இதனை செப்பனியா தீர்க்கர் அன்றைக்கு இஸ்ரவேலரிடையே இறைவாக்காக உரைத்தார் (செப் 3:17) இத்திருவார்த்தை இன்றும் நம்மிடையே தொடர்கின்றது. உலக வாழ்விலே நமக்கு ஏற்படுகிற கடினமான சூழல்களிலே, மிகப்பெரிய விடுதலை தருபவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, அவரால் எல்லாம் கூடும். "அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும்" (சங் 33:9). ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு நம்மை அர்ப்பணிப்போம், அவரே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan




## மன்னா ஜூலை-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை. ஜூலை மாத மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்கம்3-ல், யோசுவாவும் காலேபும் இஸ்ரவேலருக்கு நற்செய்தியை பகிர்ந்து திடப்படுத்தினார்கள் என்பதையும், பக்கம் 4-ல், தன்னல மற்றவர்களாகவும், மன்னிக்கும் மனநிலையோடு,சாந்தகுணம் உள்ளவர்களாய் வாழ வேண்டும் என்பதையும், பக்கம் 6-ல், துதிக்க வேண்டும்,கருத்தாய் ஜெபிக்க வேண்டும், ஜெபம் கர்த்தருக்கு பிரியமாய் இருக்க வேண்டும் என்றும், பக்கம் 8-ல், ஆவியின் கனியான அமைதி (சமாதானம்) ஒவ்வொருவரிலும் முழுமையாக வெளிப்பட வேண்டும் என்றும், பக்கம் 9-ல்,சிறு பிள்ளைகளைப் போல நமது வாழ்வு நற்சாட்சி உள்ளதாக இருக்க வேண்டும் என்றும், பக்கம் 10-ல், இயேசுவின் சீடரான யோவான் அன்பின் ஆழத்தை தெளிவு படுத்தினார், அப்படியே நாமும் அன்புள்ளவர்களாக வாழ வேண்டும் என்றும், சிறு பிள்ளைகளின் புதிர்களுக்கான விடைகள் எழுதியிருப்போர், சிறு பிள்ளைகளின் கைவண்ணங்கள், திருமறை வினாவிற்கான விடைகளை எழுதி இருப்போர், இம்மாதப் புதிர்கள் மற்றும் அனைத்து ARTICLE எழுதியுள்ளோர் என அனைவருக்கும், அனைத்திற்கும் வாழ்த்துக்கள். ஆண்டவர் இயேசு ஆசிர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,
ஆயர்.



# ஏலியின் சமர்ப்பணம்

## (1 சாமுவேல் 3:1-21)

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் ஆலயத்தில் ஊழியம் செய்யும் ஊழியரான ஏலி ஆண்டவர் மீது அதிக பற்றுள்ளவராக காணப்பட்டார் (1 சாமுவேல் 1:17). அன்னாளிடத்தில் நீ சமாதானத்தோடு போ கர்த்தரிடத்தில் நீ கேட்டபடி அவர் உனக்கு கட்டளையிடுவார் என்று உறுதியாக சொல்லி அனுப்பினார், அவ்வாறே "சாமுவேல்" பிறந்தார்.

ஆண்டவரின் ஊழியரான ஏலியிடத்தில் சாமுவேல் வளருகிறார். சாமுவேலுக்கு ஜெபிக்கக் கற்றுத் தருகிறார். "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்"(1 சாமு 3:9). இந்த ஜெபம் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் முதலில் சொல்லிக் கொடுப்பது,அது ஏலி கற்பித்த ஜெபமே.இந்த ஜெபத்தில் அவ்வளவு சத்தியம் அடங்கியுள்ளது.

மிகவும் அருமையான ஜெபம், கர்த்தரிடத்தில் தன்னை முழுமையாக தாழ்த்துவதும், ஆண்டவரே நீங்க சொல்லுங்க நான் அப்படியே அதைக் கேட்டு அதன்படி செய்கிறேன் என்பதாகவும் உள்ளது.

கர்த்தர் சிறு பிள்ளையான சாமுவேலிடம் பேசியதை ஏலி கேட்கிறார்.கர்த்தர் ஏலியின் பிள்ளைகளின் அழிவைக் குறித்து சாமுவேல் சொன்னதைக் கேட்டதும்,ஏலி கூறியது 1 சாமுவேல் 3:18— அவர் கர்த்தர் அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்றார். ஏலி கூறியதை பார்க்கின்ற போது, அவர் ஆண்டவராகிய கர்த்தர் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பது தெரிய வருகிறது.

சீலோவில் இருக்கிற கர்த்தரின் பெட்டியை கொண்டுவர இஸ்ரவேலரும் ஏலியின் குமாரரான ஓப்னியும், பினெகாசும் சென்றார்கள். அப்போது அவர்களுக்கு விரோதமாக பெலிஸ்தியர் எழுந்து யுத்தம் செய்து இஸ்ரவேலர் அநேகரை முறியடித்தார்கள். அதில் கர்த்தருடைய பெட்டியும் பிடிப்பட்டது, ஏலியின் பிள்ளைகளும் மாண்டார்கள்.

ஏலி கர்த்தரின் பெட்டி வரும் என்று காத்திருந்தார். ஆனால் முதலில் உமது இரண்டு பிள்ளைகளும் மாண்டார்கள் என்று செய்தியை கேட்டபோது ஏலி பெரிய துக்கம் அடையவில்லை. ஆனால் கர்த்தரின் பெட்டி பிடிபட்டது என்று ஏலி கேள்விப்பட்டவுடன் அவர் பின்பக்கமாக விழுந்து செத்துப் போனார்.கர்த்தரின் பெட்டிக்காக ஏலியின் இருதயம் தத்தளித்துக் கொண்டிருந்தது, பெட்டி பிடிபட்டது என்ற செய்தி அவரால் தாங்க முடியவில்லை. இதுதான் ஆண்டவர் மீது உள்ள பற்றும், அன்பும் ஆகும்.

### ஏலியின் அர்ப்பணிப்பு:

- 40 வருடம் ஏலி இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார்.
- கடவுளுக்கு உகந்த ஊழியராகக் காணப்பட்டார்.
- சாமுவேல் என்ற நல்ல ஊழியரை உருவாக்கினார்.
- கர்த்தர் எதைச் செய்தாலும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டார்.
- கர்த்தர் செய்வார் என்று உறுதியாகக் கூறினார்.

- கர்த்தர் மீது அதிக பற்றுதலும், அன்பும் உள்ளதை அவர் மரணம் தெரிவிக்கிறது. ஆனால் பிள்ளைகளை சரியாக வளர்ப்பதில் கோட்டை விட்டார்.
- ஊழியராக, ஆசாரியராக, நியாயாதிபதியாக 40 வருடம் திருப்பணி செய்துள்ளார்.

**அறைகூவல்:**

ஏலி இடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது, நாம் எப்போதும் கடவுளுக்கு உகந்தவர்களாகவும்,அவரின் பிள்ளைகளாகவும், ஊழியர்களை உருவாக்குபவர்களாகவும், ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் பங்கு கொள்பவர்களாகவும் கர்த்தர் என் வாழ்வில் எதைச் செய்தாலும் நன்மைக்கே செய்வார் என்றும், கர்த்தர் மீது உறுதியான நம்பிக்கையுடன் வாழ அழைக்கப்படுகிறோம்.

பிள்ளைகளை கர்த்தர் பக்கம் திருப்பி நல்ல குண நலன்களுடன் வளர்ப்பதில் தவறக் கூடாது. பிள்ளைகளைக் கர்த்தர் நம் கரங்களில் கொடுத்துள்ளார். அவர்களுக்கு நாம் தான் பொறுப்பு, நல்ல முன்மாதிரிகளை முன் வைக்க வேண்டும்.அப்படி செய்ய கர்த்தர் கிருபை செய்வாராக, ஆமென்.

இறைப்பணியில்,
ஆயரம்மா



*Mrs.P.Velanganni*

# செயலர் மடல்



கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும், கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த மாதம் முழுமையும் நம்மை பாதுகாப்பாக வழிநடத்தி வந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதத்திலும் ஆண்டவர் இயேசு நமக்கு துணை இருக்க ஜெபிப்போம். திருச்சபையில் கடந்த மாதம் நடந்த அனைத்துத் திருச்சபை நிகழ்வுகளுக்காகவும் ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி செலுத்துவோம். தற்போதும் விடுமுறைக்காக நமது திருச்சபையின் குடும்பத்தினர் அநேகர் தங்கள் ஊர்களுக்கு சென்று இருக்கின்றனர். அவர்களின் விடுமுறைகள் மகிழ்வுடன் அமைந்திடவும், அவர்களின் பயணங்கள் பாதுகாப்பாக இருந்திடவும் ஜெபிப்போம். கர்த்தருக்குச் சித்தமானால் மீண்டும் சிறுவர் வேதாகம பள்ளி. (C.B.S) செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் (06.09.25) தொடங்க உள்ளது என்பதையும், தொடர்ந்து 13.09.25 – அன்றைக்கு சிறு பிள்ளைகளுக்கான கிறிஸ்துவுக்கு சாம்பியன (CHAMP FOR CHRIST) நடைபெற உள்ளது அதற்கு ஆயத்தப்படவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## உங்கள் சிந்தனைக்கு...

ஆகஸ்ட் 15ஆம் தேதி நமது தாய் நாட்டின் விடுதலைத் திருநாள் (INDEPENDENCE DAY) ஆகும். இந்தியாவின் விடுதலைக்காக பாடுபட்டவர்கள் ஏராளமானோர், அவர்கள் நாட்டின் விடுதலைக்காக போராடினதையும், தியாகத்தையும், அவர்களின் வீரத்தையும் நினைத்துப் பார்க்க, அவர்கள் இந்திய நாட்டின் முன்மாதிரிகளானத் தலைவர்களாக உள்ளனர்.

திருமறையில், இஸ்ரவேல் இன மக்களின் விடுதலை வாழ்வுக்காக கர்த்தரின் அழைப்பை ஏற்று, தலைவராக செயல்பட்டவரே மோசஸ் ஆவார். எகிப்தின் அடிமைத்தன வாழ்வில் இருந்து இஸ்ரவேலரை எகிப்தை ஆண்ட பார்வோன் அரசருக்கு முன்னர் ஆண்டவரின் உத்தரவுப்படி, பல அற்புத— அடையாளங்களைச் செய்து விடுதலையைப் பெற்று மக்களை வழி நடத்தினார் மோசே (யாத்2:13—15).

அகிலத்தையும் படைத்த கடவுள் மனிதரைத் தேடி, மனக்குலத்தில் பிறந்தார். காரணம் பாவ அடிமைத்தன வாழ்விலும், பல பாடுகள், நெருக்கங்கள், கஷ்டங்கள் என்று கண்ணீர் வடிக்கின்ற மனிதரின் வாழ்வை களிப்பாக மாற்றவுமே இயேசு கிறிஸ்து பிறந்தார். உலகின் விடுதலைக்காக தம்மையே ஜீவபலியாக சிலுவையிலே ஈந்தார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார், முக்காலமும் நின்று நம்மை காக்கின்றார் ஆண்டவர் (யோவா3:16).

## நமக்கான சுய ஆய்வுக்கு...

இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக போராடின தலைவர்களை நினைக்கிறோம், மதிக்கிறோம். அதனை ஆகஸ்ட் 15—ல் கொண்டாடி மகிழ்கிறோம்.

திருமறையில் இஸ்ரவேலரின் விடுதலைக்காக செயல்பட்ட மோசேயை முன்னிறுத்துகிறோம், கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம். மோசே நமக்கான முன்மாதிரித் தலைவராக திகழ்கிறார்.

அனைத்திற்கும் மேலாக, அகில உலகிற்கும் விடுதலை வாழ்வளித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஆணிபாய்ந்த பாதச்சுவடுகளை இறுகப் பற்றி, அவருக்கு சாட்சிகளாக வாழ்வோம் (மத் 28: 18—20). ஆண்டவர் இயேசு தாமே நம்மை ஆசீர்வதிப்பார்.




**இறைப் பணியில்**

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்


10 things GOD can't do
HE CAN NEVER GROW WEAK OR WEARY (Is. 40:28)
HIS MERCIES CAN NEVER END (Lam. 3:22)
HE NEVER CHANGES (Heb. 13:8)
HE CAN NEVER LEAVE OR ABANDON YOU (Heb. 13:5)
HE CAN NEVER AUTHOR CONFUSION (1 Cor. 14:33)
(Job 42:2) HIS PURPOSES CAN NEVER BE STOPPED
HE CAN NEVER LIE (Tit. 1:2)
HE CAN NEVER BE BESTED BY THE POWERS OF HELL (Matt. 16:18)
HE CAN NEVER EXHAUST HIS RESOURCES (Eph. 3:16)
HE CAN NEVER STOP LOVING YOU (Rom. 8:38-39)
@HEIDILEEANDERSON

# திருவசனத்தின் வல்லமை



உலகங்கள் யாவும் கடவுள் பேசிய வார்த்தையால் உண்டாக்கப்பட்டன (எபி 11:3). கடவுள், "ஒளி தோன்றுக!" என்றவுடன் ஒளி தோன்றிற்று. அவர், "மரங்கள் உண்டாகட்டும்" என்றவுடன் அப்படியே ஆயிற்று. கடவுளின் வார்த்தைக்கு இன்றும் அதே வல்லமை உண்டு. அது மாறவே இல்லை. படைப்பு யாவும் அழிந்துபோனாலும் "ஆண்டவரின் வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும்" (1பேது 1:24,25).

தேவனுடைய வார்த்தையின் வல்லமை வேதப் புத்தகத்தில் பல்வேறு வகைகளில் வர்ணிக்கப்பட்டுள்ளது. தேவன்தாமே தமது மக்களைப் பார்த்து, "என் வார்த்தை தீயைப் போலவும், கன்மலையை தேவனுடைய வார்த்தையின் வல்லமை வேதப் புத்தகத்தில் பல்வேறு வகைகளில் வர்ணிக்கப்பட்டுள்ளது. தேவன்தாமே தமது மக்களைப் பார்த்து, "என் வார்த்தை தீயைப் போலவும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலவும் இருக்கிறதல்லவோ?" என்று சவாலிடுகிறார் (எரே 23:29). திருவாக்கினன் எரேமியா சாட்சியிட்டது: "அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற நெருப்பைப்போல் என் இருதயத்தில் இருந்தது" (எரே 20:9). திருவசனத் தீ நமது வாழ்விலுள்ள குப்பைக் கூளங்களை எரித்து சுத்தமான தங்கம்போல் நம்மை மாற்றுகிறது. அறிவாற்றல் நிறைந்த தர்க்கங்களும் செய்யக் கூடாததைத் திருவசனம் நம்மில் இலகுவாய்ச் செய்துவிடும். நாம் அதற்கு முழுச் சுதந்திரம் அளிக்க வேண்டும், அவ்வளவுதான்.

“கர்த்தருடைய குரல் வல்லமையுள்ளது; கர்த்த ருடைய குரல் மாட்சி மிக்கது. கர்த்தருடைய குரல் கேதுரு மரங்களை முறிக்கின்றது... கர்த்தருடைய குரல் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும். கர்த்தருடைய குரல் பாலைவனத்தை அதிரப்பண்ணும்" என்று தாவீது பாடினான் (சங்29:3—8). திருவசனத்தால் தீர்க்கமுடியாத பிரச்னை எதுவும் நம் வாழ்வில் இருக்க முடியாது. நித்தியத்தின் இக்கரையில் நமக்குப் பதில் கிடைக்கவேண்டிய அத்தனை கேள்விகளுக்கும் பதில் வேதத்தில் உண்டு.

உடல் நலமின்மை யாவருக்கும் உண்டு. இன்று நமக்கிருக்கும் மருத்துவ உதவிகளுக்காய்க் கடவுளுக்கு நன்றி. ஆனால் அவற்றின் வரம்பை நாம் நன்கறிவோம். கடவுளுடைய அற்புத சுகமளிக்கும் வல்லமையை நம்பும் யாவரும் அதை அனுபவிக் கலாம். இஸ்ரவேலரின் பாலைவனப் பயணத்தைக் குறிப்பிட்டு, "கடவுள் தமது வசனத்தை அனுப்பி அவர்களைச் சுகமாக்கினார்" என்று எழுதப்பட்டுள்ளது (சங் 107:20). இயேசுவிடம் உதவி நாடி வந்த நூற்றுவர் தலைவன் ஒருவன் அவரைப் பார்த்து, "ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்; அப்பொழுது என் வேலைக்காரன் சுகமடைவான்" என்றபோது, இயேசு "இத்தகைய விசுவாசத்தை நான் கண்டதில்லை" என்று பாராட்டினார் (மத் 8:8—10). இயேசுவின் சுகமளிக்கும் ஊழி யத்தைக் கவனித்துக்கொண்டிருந்த மத்தேயு, "அவர் அசுத்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, எல்லா நோயாளர்களையும் குணமாக்கினார்" என்றெழுதுகிறான் (மத்—8:16). திருவசனத்தைத் தவறாது தியானிப்பவர்கள் உள்ளத்தில் மட்டுமல்ல, உடலிலும் ஆரோக்கியமாய் இருப்பார்கள் (நீதி4:20—22). கிறிஸ்தவர்களில் பலரும் வளர்ச்சி குன்றியிருப்பது போதுமான அளவு கடவுளுடைய வார்த்தையை உட்கொள்ளாததினாலேயே. சிசுக்களைப்போல நாமும் திருவசனமெனும் பாலுக்காய் ஏங்கவேண்டும் (1 பேது 2:2). நிலத்திற்கு மழை எப்படியோ, விதைப்பவனுக்கு விதை எப்படியோ, சாப்பிடுகிறவனுக்கு ஆகாரம் எப்படியோ அப்படியே திருவசனம் நமக்கிருக்க வேண்டும் (ஏசா 55:10). அது நமக்குப் புத்துயிரும், புத்துணர்வும் தரும். வேத வசனத்தை இவ்விதம் பசி

தாகத்தோடு தியானித்தால், தேவன் அதை நமக்கு எழுதித் தந்த நோக்கம் நம்மில் முழுவதும் நிறைவேறும். "என் வசனம் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை" என்கிறார் ஆண்டவர் (வச 11).

ஆன்மீகத் துறையிலென்றாலும் சரி. பலவித அலுவல்கள் நடுவிலென்றாலும் சரி, அவசரப்படாமல் நிதானமாய்த் திருவசனத்தைத் தியானிக்க முடியாத அளவு நமக்கு நேர நெருக்கடி ஏற்படுமானால் அது ஆபத்து. பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டலாம். அல்லது திட்டங்களைத் தீட்டலாம். இவை ஏதும்ஆண்டவரைக் கவர்ந்துவிடாது. அவரது வசனத்திற்கு முன் நடுங்குகிறவனை நோக்கியே அவரது கண்கள் விரையும் (ஏசா 66:1,2). அதாவது, தமது வார்த்தையை மதிப்பவர்களையே ஆண்டவர் மதிப்பார். அவர்கள் செய்வதெல்லாம் சித்திபெறும் (சங் 1:2,3), தேவ வசனத்திலிருந்து கிடைக்கும் ஆன்மீக வல்லமை இல்லையேல் சிந்தனா சக்தியும் உடல் பலமும் அதிகக் காலம் தாக்குப்பிடிக்காது. எனவேதான் தாவீதரசன் அடிக்கடி "உமது வசனத்தின்படி என்னைப் பலப் படுத்தும்" என்று ஜெபித்தான்

Article by

**MR. G. STANLEY**

Men's Fellowship

# 2 CHRONICLES 13-24
# 2 நாளாகமம் 13-24

1. கர்த்தர் அடித்ததினால் மரித்தது யார்?
2. லேசான காரியம் என்ற பாடல் வரியை சொன்ன ராஜா யார்?
3. தன் தாயை ராஜ பதவியில் இருந்து விலக்கியது யார்?
4. வியாதி வந்து மரித்த ராஜா யார்?
5. கர்த்தருக்கு தன்னை உற்சாகமாய் ஒப்புக் கொடுத்தது யார்?
6. மிகாயாவைக் கன்னத்தில் அடித்தவன் யார்?
7. நியாயாதி பதியாக வைக்கப்பட்ட ஆசாரியன் யார்?
8. எங்கு செய்த கப்பல்கள் உடைந்தன?
9. யோராமிடம் வந்த கடிதம் யார் எழுதியது?
10. ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி பெயர் என்ன?
11. யோவாசின் கையில் கொடுக்கப்பட்டது என்ன?
12. ராஜாக்களண்டையில் அடக்கம் பண்ணப்பட்ட ஆசாரியன் யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

### ஜூலை-2025 மாத வினாவிற்கான விடைகள்

| | |
|---|---|
| *1.2 நாளா 1:14* | *7.2 நாளா 7:10* |
| *2.2 நாளா 2:16* | *8.2 நாளா 8:15* |
| *3.2 நாளா 3:13* | *9.2 நாளா 9:27* |
| *4.2 நாளா 4:16* | *10.2 நாளா 10:18* |
| *5.2 நாளா 5:12* | *11.2 நாளா 11:21* |
| *6.2 நாளா 6:41* | *12.2 நாளா 12:9* |

### ஜூலை-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. பிப்ளின் நெல்சன்

திருமதி. ஹேமலதா ஸ்டீபன்

திருமதி. ராதிகா செல்வக்குமார்

செல்வி. அஜின்ஷா

திருமதி. ரோஸ்மேரி

திருமதி. ரேனா ஜோஸ்

திருமதி. ஜோனிஸ் ஹெர்சல்



# நான் உன்னை சிறுமைப்படுத்தினேன்
# இனி உன்னை சிறுமைப்படுத்தமாட்டேன்

நாகூம்1:12

ஆண்டவரும் அருமைஇரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் ஸ்தோத்திரங்கள்.

இந்த புதிய மாதத்தில் கூட நான் என்ன செய்யப் போகிறேன்? என் எதிர்காலம் எப்படி இருக்கும்? என் வாழ்வில் நான் எப்போது ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வேன் என்று நீங்கள் எண்ணிக்கொண்டு இருக்கலாம். எனவே தான் இயேசு கிறிஸ்து நம்மை பார்த்து இந்த புதிய மாதத்தில் சொல்கிறார். நான் உன்னை சிறுமைப்படுத்தினேன். இனி உன்னை சிறுமைப்படுத்த-மாட்டேன் (நாகூம் 1:12)

நாம் அநேக நேரங்களில் அநேக இடங்களில் சிறுமைப்படுத்தப்பட்டு இருக்கலாம். வேலை செய்கிற இடத்திலும் அல்லது குடும்பத்திலும் சமுதாயத்திலும் நாம் சிறுமைப்படுத்தப்பட்டு இருக்கலாம். என்னைப் பெருமைப்படுத்தவோ. என்னை உயர்த்தி பேசவோ ஒருவரும் இல்லையே என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆகவே தான் நம்முடைய ஆண்டவர் சொல்லுகிறார் நான் உன்னுடைய சிறுமையை கண்ணோக்கி பார்த்தேன். உன் வேண்டுதலை நான் கேட்டிருக்கிறேன். நீ சிறுமைப்பட்ட எல்லா இடத்திலும் இருந்து நான் உன்னை தூக்கி எடுப்பேன். நீ சிறுமைப்பட்டுப் போவதில்லை உன்னை சிறுமைப்படுத்தின அவர்களை நான் சிறுமைப்படுத்துவேன். உன்னை நிந்தித்த அவர்களை நான் நிந்திப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அன்பு சகோதரியே உன் வாழ்நாட்களில். சுகித்திருக்கும் காலம் வரும் உன்னை இந்த அவமானத்தில் இருந்து கர்த்தர் தூக்கி எடுப்பார்.

## சிறுமைப்படுத்தப்பட்ட லேயாள்:

லேயாள். ராகேல் மூலம் சிறுமைப்படுத்தப்பட்டாள். குழந்தை இல்லை என்று ஏளனமாய்எண்ணினார்கள். கூசி போன பார்வை என்று சிறுமைப்படுத்தப்பட்டாள். அவளை அங்கீகாரம் பண்ண ஒருவரும் இல்லை. ஆகவேதான் (ஆதியாகவும் 29 :31) லேயாள் சொல்கிறாள் கர்த்தர் என் சிறுமை பார்த்தருளினார். இப்போது என் புருஷன் என்னை நேசிப்பார் என்று.சொல்லி அவனுக்கு ரூபன் என்று பெயரிட்டாள். தன் கணவரால் மூலமும், நாச்சியார் மூலமும் சிறுமைப்படுத்தப்பட்டாள்

## சிறுமைப்படுத்தப்பட்ட அன்னாள்:

அன்னாள் குழந்தை இல்லை என்று தேவாலயத்தில் சென்று ஜெபம்பண்ணுகிறாள். தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையை கண்ணோக்கி பார்த்து உம்முடைய அடியாளை நினைத்தருளும் என்று தன் இருதயத்தை ஊற்றி அழுதாள். (1 சாமுவேல் 1.11) கர்த்தர் கேட்டு அன்னாள் சிறுமையை நினைத்தருளி. அன்னாளுக்கு சாமுவேல் என்கிற

தீர்க்கதரிசியை கொடுத்தார். ஒருவேளை நீங்களும் இந்த சூழ்நிலையில் இருக்கலாம். ஆகவே தான் கர்த்தர் சொல்கிறார் நான் இனி உன்னை சிறுமைப்படுத்தமாட்டேன். நீ சிறுமைப்பட்ட எல்லா இடங்களிலும் இருந்து நான் உன்னை விடுவிப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

## சிறுமைப்படுத்தப்பட்ட நாமும் கூட

ஒருவேளை நாமும் கூட ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடத்திலும் சிறுமைபட்டுக்கொண்டே இருக்கலாம். கலங்காதீர்கள். கர்த்தர் சிறுமைப்பட்ட ஜனங்களின் பக்கம் நிற்கிறார். பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். வசனம் சொல்லுகிறது. சிறுமைப்பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர். நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர் (சங்கீதம் 9:9) இயேசு கிறிஸ்து நமக்குஅடைக்கலமானவர். நம் குடும்பத்தார் மத்தியிலும், வேலை ஸ்தலத்திலும், சமுதாயத்திலும், உறவினர்கள் மத்தியிலும் சிறுமைப்படுத்தப்படலாம். கலங்க வேண்டாம். சீக்கிரமாய் கர்த்தர் நம்முடைய சிறுமையை மாற்றுவார். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக.

## ஜெபம்

அன்பு இயேசு அப்பா எங்கள் சிறுமையை கண்நோக்கி பாரும். எங்கள் மன கண்ணீரை பாரும். எங்கள் நிந்தையைபாரும் நாங்கள் சிறுமைப்படுத்தப்பட்ட எல்லா இடத்திலும் இருந்து எங்களை தூக்கி விடும். எங்களை சிறுமையிலிருந்து எடுத்து எங்களை பெருமைபடுத்தபோகிற தேவனுக்கு தோத்திரம் உண்டாவதாக. கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக. ஆமென்!


Article by

**MRS. PHILOMINA ASHOK**

Women's Fellowship


## "FROM BROKENNESS TO GRACE"

LORD JESUS
I KNOW THERE'S A GAP
BETWEEN THE PERSON I SHOULD BE AND THE PERSON I AM
PLEASE FORGIVE ME FOR MY WRONG DOINGS
THANK YOU

LORD JESUS
I TRUST THAT YOU DIED ON THE CROSS FOR MY WRONG DOINGS
THANK YOU FOR THE GIFT OF ETERNAL LIFE YOU GIVE ME

LORD JESUS I GOT SOME BAD HABITS
I'VE GOT SOME ADDICTIONS
I'VE GOT SOME HURTS PRETTY DEEP PAIN
PLEASE PUT YOUR HOLY SPIRIT IN ME
HELP ME TO BE THE PERSON YOU CREATED ME TO BE

AMEN



# அர்ப்பணிப்புள்ள வாலிபர்

பிரியமான இறையன்பர்களே, இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.

இன்றைய காலச் சூழலில் இளைஞர்கள் குறிப்பாக இரட்சிக்கப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகள் தூய்மையாய், கீழ்ப்படிதலாய் வாழ்வது கடினம் ஆகிவிட்டது.மேலும் உலகத்தின் மாம்ச இச்சைகள், பொருளாசை,பண ஆசை, விபச்சார எண்ணங்கள், வேசித்தனங்கள், களியாட்டங்கள் போன்ற பாவங்கள் சூழ்ந்துள்ளது. குறிப்பாக இயேசுவோடு நெருங்கி வாழும் இளைஞர்களை சாத்தான் விழுங்கி விடலாம் என்று தீவிரமாய் சுற்றித் திரிகிறான்.

ஆனால் கடவுளுடைய பாதுகாப்பு நம்மை அளவில்லாமல் சூழ்ந்து கொண்டு, இருப்பது என்று சொன்னால் அது மிகையாகாது நாம் நம்மை தூய்மையாய் காத்துக் கொள்ள தினமும் திருமறையை வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் நாம் உறுதியாய் இருக்க வேண்டும்.

இங்கு நாம் தானியேல் இளம் வயதிலேயே கர்த்தருக்கு அடுத்த காரியங்களில், மூன்று வேளையும் ஜெபிப்பது, நியாயப்பிரமாணங்களைக் கைக்கொண்டு நடந்து சிங்க கெபியில் தூக்கி எறிந்து போதும் விசுவாசமாய் இருந்தார். ராஜாவின் உணவு மற்றும் பழக்கவழக்கங்களையும் அவர் நிராகரித்து, தூய வாழ்க்கையை தேர்ந்தெடுத்தார். அவர் தனது தீர்மானத்தில் கர்த்தரிடம் கிருபையைப் பெற்றார் (தானி1:8).


கர்த்தருக்காக வாழும் இளைஞர்கள் தங்களுடைய வாழ்வைத் தூய்மையாக வைத்துக் கொள்வார்கள். கர்த்தருடைய வார்த்தையை தினமும் மனதில் வைப்பார்கள்.

உலக ஆசைகளை கைவிட்டு, ஆண்டவருக்கென்றே அர்ப்பணிப்புடன் நடப்பார்கள். இரட்சிக்கப்படாத மற்ற இளைஞர்களுக்கு முன்னர், விசுவாசத்தில் முன்மாதிரியாக திகழுவார்கள்.

தானியேலைப் போல கர்த்தருக்கு சாட்சியாக வாழத் தீர்மானம் எடுக்க வேண்டும்.உங்கள் வாழ்க்கையின் வழியாக ஆண்டவரின் ஒளி இந்த உலகில் மற்றவர்களுக்கு பிரகாசிக்கட்டும்.

தானியேலின் காரியம் ஜெயமாக இருந்தது போல், நாம் கர்த்தருக்கான காரியத்தில் தீர்மானமாய் வாழும் போது, நம்முடைய வாழ்க்கையும் ஜெயமாக இருக்கும்.

எனவே, உலகத்தின் காரியங்களை வெறுத்து, திருமறையை படிப்பதிலும், ஜெபிப்பதிலும், தூய்மையிலும், நன்மை செய்வதிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக செயல்படும் போது, நம்முடைய வாழ்க்கையும் ஜெயமாக இருக்கும்.




Article by

**MISS. NANCY ESTHER**

Youth Fellowship

# DISCERNMENT

**What Is Discernment?**
Discernment is a gift from God that helps us see clearly. It means we can tell what is true from what is false and choose what pleases Him. It's more than just making decisions, it's about keeping our hearts in line with God's will.

**Key Scriptures to Remember**
- **1 John 4:1** – "Do not believe every spirit but test the spirits to see whether they are from God."
- **James 1:5** – "If any of you lacks wisdom, let him ask of God… and it will be given to him."
- **Hebrews 5:14** – "But solid food is for the mature, for those who have their powers of discernment trained by constant practice."



**How to Cultivate Discernment**
- Seek God's Wisdom: Start each day with prayer, asking God to open your eyes and guide your choices.
- Immerse in Scripture: Read and meditate on the Bible regularly. It is our ultimate source of truth, and every decision must align with its teachings.
- Listen to the Holy Spirit: Pay close attention to that gentle prompting as you pray and study the Word.
- Gather Godly Counsel: Talk with trusted believers who can offer guidance rooted in Scripture.
- Practice Reflection: Look back on your past decisions to see how God has directed you, ensuring that all your choices honor His Word.

**Practical Tips for Everyday Life**
- When faced with a choice, pause and ask, "What does Scripture say about this?"
- Write down insights or verses that speak to your situation.
- Discuss your decisions with a friend or mentor who knows the Word well.
- Remember that discernment is a journey, practice it daily and trust that God is refining your judgment.



# இயேசுவின் சீடன்

# பிலிப்பு

## பிலிப்புவின் வாழ்க்கை சுருக்கம்:

பிலிப்பு, இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவர். அவர் குறித்த தகவல்கள் குறைவாகவே இருந்தாலும், அவர் காட்டிய விசுவாசம் வலிமையானது. பிலிப்பு கலிலேயாவில் உள்ள கடற்கரை நகரான பெத்சாய்தாவில் பிறந்தவர்.இவர்தான் ஆண்டவர் இயேசுவால் முதன்முறையாக நேரடியாக அழைக்கப்பட்டவர் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர். இயேசு அழைத்த உடன் அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடர்கிறார் (யோவா 1:46). ஒரு முறை இயேசு சீடர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது,‘‘வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை’’ என்றார். அப்போது பிலிப்பு, ‘‘ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும்; அதுவே போதும்’’ என்றார். அதற்கு இயேசு, ‘‘என்னைப் பார்த்தவனே தந்தையையும் பார்த்தவன். என்னை நேசிப்பவன் என் கட்டளைகளை பின்பற்ற வேண்டும்; அவன் மீது நானும் பிதாவும் அன்பு காட்டுவோம்’’ என்றார்

## பிலிப்பின் பணிகள்:

யோவான், பத்தமோஸ் தீவுக்கு அடிமைத்தனமாக அனுப்பப்பட்டபோது, அங்கே "வெளிப்படுத்தல்" புத்தகத்தை எழுதினார். அவர் யோவான் நற்செய்தி புத்தகம், மூன்று யோவான் கடிதங்கள் (1யோவான், 2யோவான், 3யோவான்) மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றை எழுதியதாக நம்பப்படுகிறது.

## பிலிப்பின் பணிகள்:

தூய ஆவியால் வழிநடத்தப்பட்ட பிலிப்பு, காசாவுக்கு செல்லும்போது எத்தியோப்பிய அரச அலுவலருக்கு ஏசாயா நூலை விளக்கினார். அதன்மூலம் அவர் இயேசுவை ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்றார்.

சமாரியாவில் பிசாசுகளைத் துரத்தி, நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தார். சீமோன் என்னும் மந்திரவாதியும் மனம் மாறினான். பின்னர் பிலிப்பு சைத்தியா (இன்றைய ரஷ்யா) மற்றும் எராப்போலி (இன்றைய துருக்கி) பகுதிகளில் நற்செய்தி பரப்பினார்.

எராப்போலி நகரில் மக்கள் பாம்பை தங்களுடைய கடவுளாகக் கருதி வழிபட்டுக் கொண்டிருந்தனர். ஒருமுறை, பிலிப்பு அந்த வழிபாட்டு இடத்தில் நுழைந்து, கையில் சிலுவையை ஏந்தி பாம்பு செத்துப் போகட்டும் என சபித்தார். உடனே பலிபீடத்தின் அடியில் இருந்த ஒரு பெரிய பாம்பு விஷத்தை உமிழ்ந்து பலரை கொன்றுவிட்டு இறந்தது.


அதில் மன்னனின் மகனும் உயிரிழந்தான். கோபமடைந்த மக்கள் பிலிப்பை கொல்லத் திட்டமிட்டனர். ஆனால் பிலிப்பு பயப்படாமல், அந்த இளைஞனின் கையைப் பிடித்துத் தூக்கினார்; அவன் உயிர் பெற்றான். இதனால் மக்கள் அதிர்ந்து பயந்தனர். இருப்பினும் பிலிப்புவை சிலுவையில் அறைந்து கொல்ல முடிவு செய்தனர். 87 வயதான பிலிப்பு சிலுவையில் கட்டப்பட்டபோது, “இயேசுவே, இவர்களை மன்னியும்” என்று உரக்கச் சொன்னார். மக்களின் கோபம் இரட்டிப்பாகி, பிலிப்பின் மீது கற்கள் வீசப்பட்டு அவர் இரத்தம் வடிந்து மரணமடைந்தார்

**பிலிப்பு வாழ்கையிலிருந்து நாம் கற்று கொள்ளவேண்டியது:**

பிலிப்புவைப் போல, இயேசுவின் மீது கொண்ட அசைக்க முடியாத விசுவாசம் கொண்டவர்களாகவும், தூய ஆவியின் துணையோடு வாழ்பவர்களாகவும் நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம்.

Article by

**MISS. AJINSHA**



# HOW TO PRAY FOR A DEEPER RELATIONSHIP WITH GOD

**Pray for your faith:**

*Dear God, I pray that You help me to put my faith and trust in Your love for me. Help me to trust in Your abundant goodness and find my security in You.*

**Pray for your heart:**

*Dear God, I pray that You guard my heart with Your peace. Please search me and reveal any hurt or evil within me. Lead me to holiness and everlasting life.*

**Pray for your desires:**

*Dear God, I pray that You give me the desire and strength to do what pleases You. Work in me and help me to seek Your interests above my own.*

**Pray for your devotion:**

*Lord please let me have a never ending devotion to You. Help me to always long for You and to live a life that is all about pleasing You.*

**Pray for your character:**

*Dear God, I pray that You produce a righteous character in me. Let my character bring much glory and praise to You through Jesus Christ.*

# BIBLE VERSES TO PRAY FOR A RELATIONSHIP WITH GOD

**For your faith**

1 John 4:16
Romans 15:13
Habakkuk 2:4

**For your heart**

Philippians 4:7
Psalms 139:23-24
Psalm 51:10

**For your desires**

Philippians 2:13
Psalm 86:11
Psalm 37:4

**For your devotion**

Psalm 42:1-2
Proverbs 3:5-6
John 3:30

**For your character**

2 Peter 1:5-8
Hebrews 12:14
2 Peter 3:14

# JULY Winners

## Cross Word

- ○ Iniyal Evangelin
- ○ Sherinsha

## Fill in the Blanks

- ○ Iniyan Immanuel
- ○ Sherinsha
- ○ Joshua Jose
- ○ Hazel Hartlyn
- ○ Jesil Bernice.

## Kids Colouring

- ○ Shaana Liliya
- ○ Iniyan Immanuel
- ○ Johanna Jose
- ○ Hazel Hartlyn
- ○ Jesil Bernice

## Word Search

- ○ Iniyal Evangelin
- ○ Sherinsha
- ○ Joshua Jose
- ○ Hazel Hartlyn
- ○ Jesil Bernice

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**to Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


Name: Date:

Kids Coloring



# Paul's

# SHIPWRECK



**Read Acts 25:23-27 and 27:1-28:10.**
**Find and circle the words below.**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| T | J | L | X | Z | E | V | J | X | L | P | B | F | C | Y |
| R | H | A | Y | T | B | N | U | Q | F | H | T | A | A | O |
| H | K | R | X | L | I | M | L | N | T | O | Z | I | E | M |
| W | J | Q | E | H | A | B | I | K | U | E | S | R | S | K |
| N | V | B | K | E | Y | A | U | J | K | N | X | H | A | I |
| G | O | S | H | C | M | E | S | O | L | I | N | A | R | P |
| T | S | M | M | U | Y | O | Q | C | I | X | Q | V | Y | P |
| S | T | H | A | B | H | M | N | R | G | Y | S | E | C | U |
| E | O | L | L | U | J | A | K | T | N | M | I | N | J | R |
| H | R | I | T | A | E | B | C | J | H | O | R | Y | Z | D |
| M | M | F | A | C | N | R | M | I | V | S | D | B | J | B |
| S | H | I | P | W | R | E | C | K | U | Y | X | O | Y | B |
| R | V | R | I | S | Q | P | U | B | L | I | U | S | B | G |
| I | I | E | G | R | O | X | V | I | P | E | R | K | U | T |
| N | D | A | M | F | K | F | Q | X | O | A | L | A | H | H |

- STORM
- CAESAR
- PHOENIX
- SHIPWRECK
- VIPER
- FIRE
- JULIUS
- MALTA
- YOM KIPPUR
- FAIRHAVEN
- PUBLIUS
- THREE MONTHS

Name : ..........................................................


WORD SEARCH

FIND THE WAY

Name : ..........................................................

# Noah's Ark Maze


Help the animals find Noah's Ark.



CROSS WORD

Name : ..............................................................

# BIBLE CROSSWORD I



by *Philologus*

© BiblePuzzles.org.uk

## Across

1 An ancient weight (6)

4 Seemed (8)

10 New Testament book (9)

11 Unit of length (5)

12 '...it is a ____ thing the king requireth' (Dan 2:11) (4)

13 Contemplation (10)

15 Abigail supplied David with one hundred clusters of these (7)

16 A son of King David (6)

19 Concurred (6)

21 Light sources (7)

23 Propitiations (10)

25 A false god (4)

27 Gather (5)

28 Abimelech was hit by this (9)

29 Instructors (8)

30 Hastily (6)

## Down

1 Skilled animal workers (8)

2 Inspiring (9)

3 Compass point (4)

5 Intense emotion (7)

6 The words of Jeremiah said not to listen to these (10)

7 Jewish leader (5)

8 'He is proud, knowing nothing, but ______ about questions and strifes of words...' (1 Tim 6:4) (6)

9 Bread makers (6)

14 In this year of King Nebuchadrezzar's reign, Nebuzaradan arrived in Jerusalem (10)

17 Ancient city of Og, King of Bashan (9)

18 Stringed instrument (8)

20 Joseph, perhaps? (7)

21 Tiny amount (6)

22 Jesus did this with authority (6)

24 Last letter of the Greek alphabet (5)

26 Province of the Roman Empire (4)

THE PARABLE OF THE SOWER. LUKE 8: 1:15

# Which seed are you?



## The seed who fell along the path.



This is someone who hears the Word of God; but when the devil comes and takes away the word from their heart they do not believe any longer.

## The seed who fell on rocky ground.



Someone like this recieves the word with great Joy! but they have no <u>root.</u> When trials come, they fall astray.

## The seed who fell among the thorns.



These are those who listen and believe in Gods word, but their faith is choked out by worry, riches of this world, responsibilities, pleasures and life. One who is a seed who falls among the thorns are <u>not</u> able to help anyone else believe the Good news.

## The seed who fell on good soil.



These are people with a good heart, hear the word, retain it and produce crop (spread the word).

*Acts 3:19-20*
***So turn to God! Give up your sins, and you will be forgiven. Then the time will come when the Lord will give you fresh strength. He will send you Jesus, his chosen Messiah.***

# AUGUST - 2025

| | |
|---|---|
| 01-AUGUST | Mr. S. Simeyon |
| 02-AUGUST | Mrs. Blessy Grace Jonish |
| 02-AUGUST | Mrs. Blessy Pearl |
| 03-AUGUST | Mr. D. Rajavel |
| 03-AUGUST | Master. Marston Isac |
| 03-AUGUST | Ms. Kaitlin Fiona |
| 09-AUGUST | Ms. Tisa Aavira Timotheus |
| 10-AUGUST | Mr. Enock Prabhakaran |
| 10-AUGUST | Mr. Aquline Abish |
| 12-AUGUST | Mr. Jeremiah Kingston |
| 13-AUGUST | Mrs. D. Berlin Suniba |
| 14-AUGUST | Master. Jeremiah Alan |
| 15-AUGUST | Mr. Y. Mesiah Das |
| 16-AUGUST | Mr. Derin Joy |
| 20-AUGUST | Master. Aldan Derick |
| 22-AUGUST | Mrs. S. Banu Priya |
| 24-AUGUST | Ms. Crasslin Devona |
| 25-AUGUST | Dr. Livingston Samuel |
| 28-AUGUST | Mrs. Augusta Lawrence |
| 28-AUGUST | Ms. Joanna Stanly |

"For through wisdom your days will be many, and years will be added to your life."

-proverbs 9:11

| | |
|---|---|
| 28-AUGUST | Master. Jerone Rimy |
| 28-AUGUST | Ms. Jeslin Rexcy |
| 29-AUGUST | Mrs. R. Preeda Nancy |
| 30-AUGUST | Mrs. Padma Joy |
| 31-AUGUST | Mrs. Anitha Rajan |

# AUGUST *Wedding* ANNIVERSARY

**18-AUG** Mr. Derick Gasbath Joy & Mrs. John Gerald Sheeb

**21-AUG** Mr. M.C. Christopher & Mrs. Beeta Christopher

**23-AUG** Mr. Jason Samuel & Mrs. Patricia Santhi

**26-AUG** Mr. A. Yobu & Mrs. Anna Jothi

**29-AUG** Mr. B. Pushparaj & Mrs. G.S. Biji Kumari

**29-AUG** Mr. P. Lifin Raj & Mrs. K.V. Ashmitha Lifin Raj

**31-AUG** Mr. Suresh Babu & Mrs. K.S. Abisha















# OUTREACH MINISTRY

Our Outreach Ministry is dedicated to reaching communities with the love and truth of Jesus Christ. Through house visits, prayer gatherings, Bible study, and personal care, we bring the Gospel to those who may never step into a church building. We walk alongside people in their struggles, offering encouragement, hope, and the message of salvation. Whether under a palm tree or in a labor camp room, our mission remains the same: to see lives transformed by the power of God's Word and the presence of the Holy Spirit.












IT IS FOR FREEDOM
THAT CHRIST HAS
SET US FREE
GALATIANS 5:1
EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org
STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY